[20th July 1957

THE HON. SRI C. SUBRAMANIAM : எவ்வளவு உயர்ந்திருக்கிறது என்று திட்டமாகச் சொல்ல முடியாது. ஆனால், வாழ்க்கைச் செலவுப் புள்ளி இரண்டு சதவிகிதம் உயர்ந்திருக்கலாம் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

SRI A. A. RASHEED : Sir, is the Hon. Minister aware that the prices of some magazines and newspapers have been raised?

THE HON. SRI C. SUBRAMANIAM : Of course they have increased the prices. But that does not cause us any concern. We are concerned really with the increase in price of articles which are absolutely essential to the community.

Mental Hospital, Madras

* 156 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR (on behalf of Sri N. K. Palanisami) : Will the Hon. the Minister for Revenue be pleased to state the steps taken to relieve congestion in the Mental Hospital, Kilpauk, Madras?

THE HON. SRI M. A. MANICKAVELU : In March last the Government have increased the bed-strength of the Mental Hospital, Madras, from 888 to 1800. An expenditure of Rs. 74,900 has been sanctioned towards certain additions and alterations to the buildings of the hospital.

Proposals for the opening of a Mental Hospital at Madurai, the establishment of a Mental Jail to accommodate separately criminal mental patients and for the transfer of civil and criminal mental patients belonging to the Andhra State to the Mental Hospitals in Andhra Pradesh are also under the consideration of Government.

SRI M. S. SELVARAJAN : குற்றாலத்தில் ஒரு தனியார் "மெண்டல் ஹாஸ்பிடல்" இருக்கிறது. இயற்கையாகவே மனோ வியாதியைக் குணப்படுத்தக்கூடிய சூழ்நிலை குற்றாலத்தில் இருப்பதால், குற்றாலத்திலுள்ள அந்த ஆஸ்பத்திரியை தானே எடுத்துக்கொண்டு நடத்துவதற்கு அரசாங்கம் முன்வருமா?

THE HON. SRI M. A. MANICKAVELU : இப்போது, தென்காசி தாலூகாவில் ஒரு இடத்தில் "க்ரிமினல் மெண்டல் பேஷண்ட்ஸ்"-க்காக ஒரு ஆஸ்பத்திரியை அரசாங்கத்தார் ஏற்படுத்தப்போகிறார்கள். அதை வேண்டுமென்று எடுத்துக்கொள்ள யாராவது முன்வந்தால் பிறகு இதைப் பற்றிப் பரிசீலிக்கலாம்.

SRI S. B. ADITYAN : ஆந்திரப் பிரதேசத்தைச் சேர்ந்த நோயாளிகளும் கேரள ராஜ்யத்தைச் சேர்ந்த நோயாளிகளும் இப்போது சென்னைப் பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் இருக்கிறார்கள் அல்லவா? அந்த நோயாளிகளை அந்த ராஜ்யங்களுக்கு மாற்றுவதுபற்றி அந்தந்த ராஜ்ய அரசாங்கங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி, அந்த ராஜ்யங்களுக்கு அவர்களை அனுப்பி, இங்குள்ள நெருக்கடியை அரசாங்கம் குறைக்குமா?

THE HON. SRI M. A. MANICKAVELU : மூலக் கேள்விக்கு பதிலளிக்கையில் கடைசியில் இந்த உப கேள்விக்கான பதிலையும் சொன்னேன். இங்குள்ள ஆந்திர ராஜ்யத்தைச் சேர்ந்த நோயாளிகள் சுமார் 102 பேர்கள். அவர்களை ஆந்திர ராஜ்ய ஆஸ்பத்திரியில் எடுத்துக்கொள்வதற்கு அந்த அரசாங்கத்தார் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள், அந்த நோயாளிகளை அங்கே அனுப்புவது அமலுக்கு வர வேண்டும்.

20th July 1957]

SRI V. K. KOTHANDARAMAN : மெண்டல் ஹாஸ்பிடலில் உள்ள நோயாளிகள் அனேகமாக சுய அறிவு இல்லாதவர்கள். அவர்கள் தவறு செய்வது சகஜம். அப்படிப்பட்டவர்களை ஆஸ்பத்திரியில் உள்ள வர்கள் கொடுமைப்படுத்துகிறார்கள் என்று கேள்விப்படுகிறேன். அரசாங்கம் இதைக் கவனிக்குமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : நான் இன்னொன்றும் கேள்வி பட்டேன். அதாவது, சுய அறிவு இல்லாதவர்கள் ஆஸ்பத்திரி சிப்பந்தி களையும் கொடுமைப்படுத்துகிறார்களாம்.

SRI S. PAKKIRISAMI PILLAI : இந்த மூளைக் கோளாறினால் அவஸ் தைப்படும் சின்னஞ்சிறு பிள்ளைகளுக்கு தனியாக அந்த ஆஸ்பத்திரியில் இடம் ஒதுக்கியிருக்கிறார்களா ? அப்படி இருந்தால் அவர்களை மற்ற பெரியவர்களிடம் இருந்து பிரித்து தனியாக வைத்து அனுதாபத்தோடு சிகிச்சை செய்ய என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் ? 9–10 a.m.

THE HON. SRI M. A. MANICKAVELU : அதற்குத் தனியாக "சில்ட்ரன் ஆஸ்பத்திரி " என்று கிடையாது. கூடியவரையில் அவர்களைத் தனி யாக வைத்துத்தான் சிகிச்சை அளிக்கப்படுகிறது.

SRI K. ANBAZHAGAN: மூளைக் கோளாறு படைத்தவர்களுக்கான ஆஸ் பத்திரியில் அவர்கள் கூட்டமாக வாழும் முறையில் வைத்து சிகிச்சை அளிக் கிற காரணத்தால் மூளைக் கோளாறு குணமாவதற்குப் பதிலாக அதிக மாகவே ஆகும் நிலைமை விளைவதால் அவர்களுக்குத் தனித்தனியாக வாழ வழி செய்து கொடுத்து அநுதாபத்தோடு, மனோதத்துவ அடிப் படையில் சிகிச்சை அளிக்க வசதி செய்யப்படுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : கூடியவரையில் புதுப்புது முறைகளைக் கையாண்டுதான் வருகிறார்கள். இப்போது எலெக்ட்ரிக் ஷாக் என்று இருக்கிறது. சைகியாட்ரிக் ட்ரீட்மெண்டு வேறு அதிக மாக வற்புறுத்தப்படுகிறது. முன்பு மூளைக் கோளாறுக்கு கொடூரமாக சிகிச்சை அளிக்கும் முறை இருந்திருக்கலாம். இப்போது எவ்வளவு நல்ல முறையில் சிகிச்சை அளிக்கப்படவேண்டுமோ அவ்வளவு நல்லமுறையில் அளிக்கப்படுகிறது.

SRI A. GOVINDASAMY : இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மதுரையில் வேறு ஒரு பைத்தியக்கார ஆஸ்பத்திரியைத் திறப்பதாக ஒரு திட்டம் போட்டார்களே ? அது நடைமுறைக்கு வருகிறதா அல்லது கைவிட்டுவிட்டார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அதைக் கைவிட வேண்டிய அவசியம் இல்லை. 15 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இடமும் குறித்திருக்கிறார்கள். கூடியசீக்கிரம் வேலை துவங்கும்.

SRI M. P. SUBRAMANIAM : இந்தப் பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் வந்து சேருகின்ற நோயாளிகளில் யாரும் வெளியில் பைத்தியம் தெளிந்து போவது இல்லை என்று நான் கேள்விப்படுகிறேன். காரணம் சாதாரண நோயாளிகளைப்போல அவர்களுக்குச் சிகிச்சை அளிக்காமல் ஆடுமாடுகளைப் போல அடித்து கொடுமைபடுத்தி சிகிச்சை அளிக்கப்படுவதால் பைத்தியம் யாருக்குமே தெளிவது இல்லை. பைத்தியம் தெளிந்து யாரும் வெளியே போவது இல்லை என்பதாக அறிகிறேன். ஆகவே அமைச்சர் அவர்கள் கடந்த மூன்று ஆண்டுகளில் சேர்க்கப்பட்ட நோயாளிகள் எத்தனை, அதில் பைத்தியம் தெளிந்து வெளியே போயிருக்கிறவர்கள் எத்தனை என்கிற புள்ளிவிவரத்தைக் கொடுப்பார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : பைத்தியம் தெளிந்தும் சிலர் போகிறார்கள். தெளியாமலும் போகக்கூடும். ஐரோப்பியர்கள், அதுவும் ராணுவம் போன்றவைகளில் உயர்ந்த உத்தியோகம் வகிப்பவர்களும் இருக் கிறார்கள். கடந்த மூன்று வருஷப் புள்ளிவிவரம் வேண்டுமென்றால் தனியாகக் கேள்வி போட்டால்தான் பதில் சொல்லக்கூடும்.